# NEWSLETTER

**November 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569








கனடாவில் வசிக்கும் திரு.திருமதி.புவிக்குமார் தர்மினி ஆகியோரின் மகன் டிலன் என்பவரின் 12 வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஆரையம்பதி செல்வாநகர் பிரதேசத்தில் வசிக்கும் திருமதி.இ.தனலெட்சுமி அவர்களுடைய பூரணமாக்கப்படாமல் தகரத்தினால் இருந்த வீடு திருத்தங்கள் செய்யப்பட்டு கற்களால் பூரணப்படுத்தப்பட்டது. திருமதி.இ.தனலெட்சுமி கணவரைப் பிரிந்த நிலையில் மரக்கறி வியாபாரம் செய்து பாடசாலை செல்லும் இரு பிள்ளைகளையும் அன்றாட வாழ்க்கைச் செலவினையும் கவனித்து வந்த வேளையில் எமது அறக்கட்டளைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இச்செயற்பாட்டினை முன்னெடுப்பதற்காக கனடாவில் வசிக்கும் எமது நீண்டநாள் நன்கொடையாளராகிய திரு.இளையதம்பி ஏகாம்பரம் ஐயா அவர்களின் ஊடாக அவரின் மகளின் குடும்பம் திரு.திருமதி.புவிக்குமார் தர்மினி தம்பதியர் எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக தமது அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது பாலர் பாடசாலை மாணவர்களுக்கான வலுவூட்டலை வழங்கும் வண்ணம் சிறுவர் பராமரிப்பு திட்டம் எனும் தொனிப் பொருளில் பாலர் பாடசாலைகளுக்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் வந்தாறுமூலை சக்தி பாலர் பாடசாலையில் பயிலும் சிறுவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் 12.11.2024 அன்று நடைபெற்றது. எமது சேவையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட இச்செயற்பாட்டில் எமது திட்டங்கள் பற்றிய தெளிவூட்டல் பெற்றோர்களுக்கும் வழங்கப்பட்டதோடு மட்டுமல்லாது அவர்களுக்கான எதிர்கால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டமை சிறப்பானதாகும்.

# Top news

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல்



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது பின்தள்ளப்பட்ட நிலையில் தேவைப்பாடுடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கற்றலுக்கான மேலதிக ஊக்குவிப்புத்தொகை ஒன்றினை மாதாந்தம் வழங்கி வருகின்றது. அந்த வகையில், மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டலில் ஒரு புதிய செயற்றிட்டமாக முன்னெடுக்கப்பட்டு கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட 7 மாணவர்களுடனான கலந்துரையாடல் 13.11.2024 அன்று எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது. எமது அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர் உள்ளிட்ட சேவையாளர்களால் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இத்திட்டம் தொடர்பான பூரண விளக்கங்களும் வழங்கப்பட்டு எமது அறக்கட்டளையுடன் மாணவர்களுக்கான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. இச்செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக மனித நேய நம்பிக்கை நிதியம் தமது அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.















எமது மனிதநேய சமுதாய கல்லூரிக்கு கரடியனாறு மகா வித்தியாலயத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவர்களின் ஒளிவிழாவிற்கான உபசார அனுசரணை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக வழங்கி வைக்கப்பட்டது. ஏறத்தாழ 300 பேர் கலந்து கொண்ட இந்நிகழ்வு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றதோடு இந்நிகழ்வில் எமது திட்ட முகாமையாளர் உள்ளிட்ட கள சேவையாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இராமச்சந்திரன் மதிவண்ணன் அவர்கள் தமது அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமுதாயக் கல்லூரி மாணவர்களுக்கான சிரட்டை பயிற்சி

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஊடாக புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் கிராமங்களை நோக்கிய இளைஞர், யுவதிகளின் வலுவூட்டல் செயற்பாட்டின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்த சமுதாய கல்லூரியின் இன்னுமொரு செயற்பாடாக 22.11.2024 திகதி அன்று வள்ளிபுனம் ரேடியன் நிலையத்தில் சிரட்டையிலான கைவினை ஆக்க பயிற்சி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது. அப்பிரதேசத்தில் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் மற்றும் சுயதொழில் மேற்கொள்ள ஆர்வமாக உள்ள இளம்பெண்கள் என 20 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



## கணினிப் புரட்சியில் இரண்டாவது கிராமம் !

3 மாதகாலத்திற்கு ஒரு கிராமத்தில் மடிக்கணினிகள் மூலமாக நடமாடும் பயிற்சியாக நடைபெறும் **'கிராமங்கள் தோறும் கணினிப்புரட்சி'** எனும் செயற்பாட்டின் இரண்டாவது கிராமமாக தெரிவுசெய்யப்பட்ட ஆரையம்பதி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்டசெல்வாநகர் கிராமத்தில் மட்/செல்வாநகர் சிவா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான அடிப்படைக் கணினி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது. எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் அனுசரணையுடன் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் நடைமுறைப்படுத்தலினூடாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இளம் தலைமுறையினரிடையே கணினிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி எதிர்காலத்தின் தொழிநுட்பப் புரட்சிக்கும் அவர்களைத் தயார்படுத்துவதாக அமையும். இச் செயற்பாட்டிற்கான மடிக்கணினிகளை **மனிதநேய நம்பிக்கை நிதியம்** வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு நிவாரணப்பொதிகள்



தொடர் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதேச செயலகங்களினூடாக கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளுக்கமைவாக ஏறாவூர் பற்று, வவுணதீவு மேற்கு மற்றும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.
இச்செயற்பாட்டிற்காக தமது அனுசரணையை வழங்கிய எமது அறக்கட்டளை உறவுகளின் விபரம் வருமாறு =

- மனிதநேய நம்பிக்கை நிதியம் - கொழும்பு
- திரு.இ.ஏகாம்பரம் ஐயா ஊடாக திரு.சின்னத்தம்பி குடும்பம்,
- கனடா
- திரு.வாமதேவன் அமர்நீதி – அமெரிக்கா
- திரு.இராமசாமி பெருமாள் ரவீந்திரன் - இலண்டன்
- திரு.தினேஷ் சண்முகநாதன் - மட்டக்களப்பு
- திருமதி.சாந்தினி சுகுமார் - இலண்டன்
- திரு.பாலசிங்கம் பகீரதன் - அவுஸ்திரேலியா
- திரு.இந்திரகாந்தன், திருமதி.தர்சினி – கனடா
- திருமதி.துவாரகா விஜயகுமாரன் - கனடா
















## ஜீவானந்தா இல்லத்தில் சிரமதான நிகழ்வு

எமது விவேகானந்த இளைஞர் கழகத்தினரால் ஜீவானந்தா இல்லத்தில் சிரமதான நிகழ்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டதோடு எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் மாணவர்களும் ஜீவானந்தா இல்லத்தில் வசிக்கும் மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இளைஞர்களிடைய சமூகம் பற்றிய சிந்தனையினை உருவாக்கவதுடன், மாணவர்களிடையே சூழலை சுத்தம் செய்வதன் அவசியம் பற்றி எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாது முறையான பழக்க வழக்கங்களையும் கட்டியெழுப்புவதாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது











# Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் கார்த்திகை மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569



- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



